# உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் மீது கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 840 புகார்கள்!

## 600 மனுக்களுக்கும் மேல் தீர்வு!

பிரேம்குமார்க

திருவள்ளூர், ஏப்.14-

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 840 புகார் மனுக்கள் பெறப்பட்டு, அதில் சுமார் 600 மனுக்களுக்கு மேல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேயர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சி அலுவலர்கள் மீதான முறைகேடு புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக தமிழகத்தில் கடந்த 2014ல் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஏற்படுத்தப்பட்டது. 2015 ஏப்ரலில் இருந்து முறைப்படி செயல்படத் தொடங்கிய இந்த அமைப்புக்கு இதுவரை 840 புகார்கள் வரப்பெற்றுள்ளது. இதில் சுமார் 600 புகார்களுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முறைகேடு புகார்கள் மட்டுமின்றி உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் தங்களின் பொறுப்பை வேண்டுமென்றே தட்டிக் கழித்திருப்பதாக வந்த புகார்களும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு சம்மந்தப்பட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வசூலித்த சொத்து வரியை உள்ளாட்சியில் செலுத்தாத வரித்தண்டலர்கள், கையூட்டு கொடுக்காததால் அதிகமாக சொத்துவரி கணக்கிட்ட வரித்தண்டலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காயல்பட்டினம் நகராட்சியின் பெண் நகராட்சி தலைவரைச் செயல்படவிடாமல் முடக்கிவிட்டு ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகள் தங்கள் விருப்பம்போல செயல்படுவதாக புகார்கள் வரப்பெற்றன. நடுவத்தின் விசாரணையில் அது உண்மை என தெரியவந்தால் நகராட்சி



ஆணையர், பொறியாளர் உள்ளிட்ட அத்தனை உயர் அதிகாரிகளும் கூண்டோடு அங்கிருந்து மாற்றப்பட்டனர்.

சென்னையில் வளரசவாக்கம் பகுதியில் உள்ள இராயலா நகரில் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பூங்கா, சமுதாயக்கூடங்களுக்கான இடங்களை தனியார் ஆக்கிரமித்து இருந்தார்கள். இந்த புகாரை விசாரித்து சுமார் ரூ.50 கோடி மதிப்பிலான இடங்களை மீட்டு மாநகராட்சியிடம் நடுவம் ஒப்படைத்தது.

சில இடங்களில் சாலைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு வந்ததாக புகார்களை விசாரித்து சாலைகளை போட வைத்திருக்கின்றனர். பணிகளை முடித்த ஒப்பந்ததாரர்களுக்கு தாமதமின்றி பணம் பட்டுவாடா செய்ய வைத்தது, உள்ளாட்சி அலுவலர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றியது உள்ளிட்ட பல தீர்வுகளை கண்டிருக்கும் நடுவம், உள்ளாட்சிகளுக்கு வருவாய் மற்றும் நிதியிழப்பை ஏற்படுத்தியிருப்பதற்காக மொடக்குறிச்சி பேரூராட்சி நிர்வாக அலுவலருக்கு ரூ.35 லட்சமும், காஞ்சிபுரம் மாவட்டம் இடைக்கழிநாடு பேரூராட்சியில் 3 அலுவலர்களுக்கு ரூ.12.5 லட்சம் ரொக்க வரி போட்டிருக்கிறது.

அதேவேளை தவறான புகாரை தெரிவித்த சிலர் எச்சரிக்கப்பட்டு அவர்களிடம் வழக்கு செலவு தொகையாக ரூ.5000 வசூலிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

உள்ளாட்சி நிர்வாகம், உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள் சம்மந்தப்பட்ட எந்த புகாராக இருந்தாலும் நடுவத்தின் இணைய தளத்தில் தெரிவிக்கலாம். படிவம் 1ஐ பூர்த்தி செய்து அத்துடன் ரூ.10க்கான நீதிமன்ற வில்லையுடன் புகாரையும் இணைத்து சென்னையில் கதவிலக்கம் 100, அண்ணாசாலை, கிண்டி என்ற முகவரியில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அலுவலகம் அருகில் செயல்படும் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். ஆவணங்கள், சாட்சிகள் இருந்தால் அவற்றையும் இணைக்கலாம். புகார்கள் மீது உரிமையியல் நீதிமன்ற விதிகளின்படி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாநகராட்சி, நகராட்சி கவுன்சிலர்கள், பேரூராட்சி தலைவர்கள் உள்ளிட்ட 12 பேர் மீது புகார்கள் தற்போது நடுவத்தின் விசாரணையில் உள்ளது. விசாரணையை முறைமன்ற நடுவர் முனைவர் சோ. அய்யர் அவர்கள் சிறப்பாக பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்வு காண்கின்றார் என்று பொதுமக்கள் சிறப்பாக கூறிவருகின்றனர்.

எளியவர்களும் எளிதாக நாடலாம்: தொடர்புக்கு தொ.எண்: 044-22201337 மின்னஞ்சல் ombudsmanlocal@tn.gov.in இணையதளம் www.tnlbo.tn.gov.in